

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், ஈசாந்திமங்கலம் பகுதியில்,

குடும்ப அட்டையுடன் ஆதார் எண் பதிவு செய்யும் களப்பணியாளர்களின் பணிகளை (22.12.2016) அன்று நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி. டி.சின்னம்மாள் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 903/2016 நாள்: 23.12.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், குடும்ப அட்டையுடன் ஆதார் எண் பதிவு செய்யும், களப்பணியாளர்களின் பணிகளை (22.12.2016) அன்று நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.**

தேசிய உணவு பாதுகாப்புசட்டம் 2013-ன் கீழ் முன்னுரிமை பயனாளிகள் (Priority House Holds) தேர்வு செய்தல் தொடர்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டங்களிலும் வீடு, வீடாக அனைத்து குடும்ப அட்டை தாரர்களிடம் ஆதார் எண் பதிவுசெய்தல், கைபேசிஎண் பதிவுசெய்தல், குடும்பத்திலுள்ள உறுப்பினர்கள் விபரம் மற்றும் இதரவிபரங்கள் சேகரிக்கும் பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள களப்பணியாளர்கள் மூலம் நடைபெற்றுவருகிறது.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் (22.12.2016) அன்று ஈசாந்திமங்கலம் மற்றும் இறச்சக்குளம் பகுதிகளில் நடைபெற்று கொண்டிருந்த, களப்பணியாளர்களின் பணிகளை நேரில் சென்று ஆய்வு செய்தார்.

பின்னர் ஆய்வுக்கு வரும் களப்பணியாளர்களிடம் குடும்ப அட்டைதாரர்கள் தங்கள் வசமுள்ள அசல் ஆதார் அட்டை மற்றும் அதன் நகல் கைபேசி எண் விபரம் குடும்ப அட்டையிலுள்ள குடும்ப உறுப்பினர்களின் விபரம் மற்றும் அதனை சார்ந்த விபரங்களை களப்பணியாளர்கள் கேட்கும் போது வழங்கி பொதுமக்கள், மாவட்ட நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

ஆய்வின் போது மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி. டி.சின்னம்மாள், தோவாளை வட்டாட்சியர் திருமதி. முத்துலெட்சுமி, தோவாளை வட்ட வழங்கல் அலுவலர் திரு. பாபு ரமேஷ் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.